### எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு : ஒன்றிய அரசையும் – அதற்குத் துணை போகும் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து

# தமிழ்நாடு முழுவதும் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணித் தலைவர்கள் – அமைச்சர்கள் உள்ளிட்ட லட்சக்கணக்கானோர் திரண்டனர்!

**சென்னை, மார்ச் 15 -**

**தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை; அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை! தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் NDAஅரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் நேற்று (15.3.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணிக்கு மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெற்றது!**

இதில் லட்சக்கணக்கானோர் திரண்டு கண்டன முழக்கமிட்டனர்.

ஒன்றிய பா.ஜ.க. NDA அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையினாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததன் விளைவாகவும் இன்று நாடு முழுவதும் சமையல் கேஸ் சிலிண்டருக்கும் - வணிக ரீதியிலான கேஸ் சிலிண்டருக்கும் தட்டுபாடு ஏற்பட்டு மக்கள் அவதியுற்று வருகின்றனர்.

உணவகங்கள், வணிக நிறுவனங்கள் சரிவர இயங்க முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. சிறுகுறு தொழில்கள் உள்ள அதிக தொழில்வளமிக்க தமிழ்நாடு இந்த கடுமையான பாதிப்பை சந்திக்கும் என்பதால் ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து நிலைமையை சரிசெய்ய வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் வாயிலாக வலி யுறுத்தி இருந்தார். ஆனால் தற்போது வரை மக்களிடையே நிலவும் அச்சத்தைப் போக்கி நிலைமையை சீராக்க முறையான நடவடிக்கை எடுக்கவில்லை ஒன்றிய NDA அரசு. நாடாளுமன்றத்தில் இதைப்பற்றி பேசவே பிரதமர் மறுத்து வருவது கண்டனத்திற்குரியது. அதோடு தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி, நூறு நாள் வேலை திட்ட நிதி, குடிநீர் இணைப்பு நிதி என எந்த நிதியையும் ஒதுக்காமல் நிறுத்தி வைத்திருப்பது. கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டம், ஒசூர் விமான நிலையம் என எந்தவொரு வளர்ச்சித் திட்டத்திற்கும் அனுமதி தராமல் முட்டுக்கட்டை போட்டு வருவது. மும்மொழி திணிப்பு என்ற பெயரில் தமிழ்மொழியை அழிக்க துடிப்பது, கீழடி அகழ்வாய்வு முடிவுகளை ஏற்க மறுப்பது என தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

இப்படி தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து நேற்று (மார்ச் 15ஆம் தேதி - ஞாயிற்றுக்கிழமை), காலை 10.30 மணி யளவில், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் ‘மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி’ சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெற்றது.

### கூட்டணிக் கட்சித் தலைவர்கள் முழக்கம்!

மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சி களின் சார்பில் நடைபெற்ற இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், தஞ்சாவூர் – திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்களும், சென்னை கிழக்கு – கு.செல்வபெருந்தகை (காங்கிரஸ்), மதுரை - வைகோ (ம.தி.மு.க), காஞ்சிபுரம் - பெ.சண்முகம் (சி.பி.எம்.) பெரம்பூர் - சென்னை வடக்கு - மு.வீரபாண்டியன் (சி.பி.ஐ.), சென்னை மேற்கு - அபுபக்கர் (இ.யூ.மு.லீக்), சென்னை தெற்கு - தொல்.திருமாவளவன் (வி.சி.க), சென்னை தென் மேற்கு - அருணாசலம் (ம.நீ.ம), சென்னை மேற்கு - எம்.எச்.ஜவாஹிருல்லா (ம.ம.க), கோவை - ஈ.ஆர். ஈஸ்வரன் (கொ.ம.தே.க.), சென்னை மேற்கு - எல். கே.சுதீஷ் (தே.மு.தி.க), சென்னை தெற்கு - தி.வேல்முருகன் (த.வா.க), சிதம்பரம் - ஜி.எம்.ஸ்ரீதர் வாண்டையார் (மூ.மு.க.), சென்னை மேற்கு - தமிமூன் அன்சாரி (ம.ஜ.க.), திருப்பூர் - உ.தனியரசு (கொ.இ.பே.), சென்னை வடகிழக்கு - திருவொற்றியூர்- முபாரக் (எஸ்.டி.பி.ஐ.), விருதுநகர் - கருணாஸ் (மு.பு.ப), கரூர் - ஜக்கையன் (ஆதித்தமிழர் கட்சி), கோவை - நாகை திருவள்ளுவன் (தமிழ்புலிகள் கட்சி), திருச்செங்கோடு - அதியமான் (ஆதித் தமிழர் பேரவை), திருச்சி - கே.கே.செல்வகுமார் (தமிழர் தேசம் கட்சி), ஈரோடு - கே.எஸ்.ராஜ்குமார் (புதிய திராவிட கழகம்), கோவை - வெண்மணி (திராவிடர் தமிழர் பேரவை),

### அமைச்சர்கள் பங்கேற்பு!

திருச்சி - முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, திண்டுக்கல் - துணைப் பொதுச்செயலாளர் - ஐ.பெரியசாமி, திருவண்ணாமலை - எ.வ.வேலு, கடலூர்- எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சாத்தூர் - கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன். விருதுநகர் – தங்கம் தென்னரசு, புதுக்கோட்டை - எஸ்.ரகுபதி - ஈரோடு - சு.முத்துசாமி. சிவகங்கை - கே.ஆர்.பெரிய கருப்பன், செங்கல்பட்டு - தா.மோ.அன்பரசன், திருப்பூர் - மு.பெ.சாமிநாதன், தூத்துக்குடி – கீதாஜீவன், திருச்செந்தூர் – அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இராமநாதபுரம் – ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சேலம் - இரா.இராஜேந்திரன், ஒட்டன்சத்திரம் - அர.சக்கரபாணி, இராணிப்பேட்டை - ஆர்.காந்தி, சென்னை தெற்கு- மா.சுப்பிரமணியன், மதுரை – பி.மூர்த்தி, அரியலூர் - எஸ்.எஸ்.சிவசங்கர், சென்னை கிழக்கு - பி.கே.சேகர் பாபு, கும்பகோணம் - கோவி.செழியன், மதுரை மத்திய – பழனிவேல் தியாகராஜன், திருவள்ளூர் – சா.மு. நாசர், பொன்மலை, திருச்சி - அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அறந்தாங்கி - சிவ.வீ.மெய்யநாதன், விருத்தாசலம் - சி.வெ.கணேசன், திருவாரூர் – டி.ஆர்.பி.ராஜா, நாமக்கல் - மா.மதிவேந்தன், கன்னியாகுமரி – த.மனோ தங்கராஜ், தாராபுரம் – என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோரும் பங்கேற்று கண்டன முழக்கமிட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த அனைத்து அமைப்புகளின் நிர்வாகிகள் அனைவரும் மற்றும் பொதுமக்கள் லட்சக்கணக்கானோர் திரண்டனர்.

---

### தொலைநோக்கும் இல்லை! முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் இல்லை!

## சிலிண்டர் தட்டுப்பாட்டுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசே காரணம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, மார்ச். 16-

ஒன்றிய அரசுக்கு தொலைநோக்குப் பார்வையும் இல்லை, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் இல்லை. சிலிண்டர் தட்டுப்பாட்டுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசே காரணம் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முக நூலில் பதிவிட்டிருப்பதாவது:-

**வெளியுறவுக் கொள்கையிலும் #FailureModel எனப் பெயரெடுத்துள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசின் தவறான முடிவுகளால் கடுமையான சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.**

**தொலைநோக்கு இல்லை, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் இல்லை. பொதுமக்களுக்குத்தான் இவர்களால் தொல்லை.**

**இதனைக் கண்டித்து, தமிழ்நாடெங்கும் நமது மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர் மாபெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். களத்தில் தகிக்கும் மக்களின் கோபத்தை உணர்ந்து, ஒன்றிய அரசு உடனடியாக நிலைமையைச் சீர்செய்திட முன்வர வேண்டும்.**




இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது முக நூலில் பதிவிட்டுள்ளார்.

---



ஒன்றிய பாஜக அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையாலும், போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததாலும் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்தும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்றம முற்போக்குக் கூட்டணி சார்பில் திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகராட்சி அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் ஆவடி சாமு. நாசர் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், நடைபெற்றது. இதில் ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ் ஆவடி மாநகர மேயர் உதயகுமார், பகுதி கழகச் செயலாளர்கள் ஜி.ராஜேந்திரன், பேபி சேகர், ஜி.நாராயண பிரசாந்த், பொன் விஜயன், உள்பட கூட்டணி கட்சி சார்ந்த தோழர்கள் திமுக நிர்வாகிகள் உள்பட பலர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.




தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசின் தவறான முடிவுகளால் நாடெங்கும் ஏற்பட்டுள்ள கடுமையான சிலிண்டர் தட்டுப்பாட்டை கண்டித்து, சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் தெற்கு பகுதியில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், தயாநிதி மாறன் எம்.பி., சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு மற்றும் தேமுதிக பொருளாளர்எல்.கே.சுதீஷ் ஆகியோர் கலந்துகொண்டனர். உடன் கழக மாணவரணிச் செயலாளர் திருமதி.ஜெ.வீரமணி, பகுதிக் கழகச் செயலாளரும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆளும்கட்சி தலைவருமான ந.இராமலிங்கம், வே.கௌதமன், கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.

---



## தமிழ் மக்கள் தம் கனவுகள் நிறைவேறப் பெறும் காலம் இது!

